உலகு 2 டிசம்பர் 08 – மார்ச் 09 பணிமடல் 10

மதுரை சீடு குழந்தைகள் வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

நற்பணியே நம் வாழ்வு!

MADURAI SEED

மதுரை, சீடு-இன் 10ஆம் ஆண்டு கொண்டாட்டங்களின் (08 ஜன் - 09 ஜன் வரை) ஒரு பகுதியாக வெளியிடப்படும் பொம்மலாட்ட சிறப்பிதழ்




உள்ளே...


- வாசகர்க்கு
  1. தகதிமிதா குழுவின் - மந்திர குச்சி
  2. வால் பசங்க குழுவின் - மரம் வளர்ப்போம்
  3. லிட்டில்ஸ் திரை குழுவின் - கனவுகள்
  4. நண்டு சிண்டு குழுவின் - நற்பணிக்கு பரிசு
  5. முகங்கள் குழுவின் - முயற்சியே வெற்றி
- பொம்மலாட்ட பயிற்சி முகாம் - அறிக்கை
- அனுபவ பகிர்வு
- பதிவுகள்


புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு டிரஸ்ட் வழிகாட்டலால்
சீடு குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது

அன்புள்ள வாசக நெஞ்சங்களே,

அம்மாவோ, அப்பாவோ, பாட்டியோ,தாத்தாவோ வாங்கி கொடுத்த பொம்மைகளில் இருந்து குழந்தைகளின் பால்ய கால வளர்ச்சி தொடங்குகின்றது. பொம்மைகளுடன் குழந்தைகள் விளையாடுதல் என்பது கூட குழந்தை நிகழ்த்துகின்ற ஒரு வகை நாடகமே. அவ்வகையில் குழந்தைகள் கொண்டாடும் ஒரு பெரும்பொருள் பொம்மைகள். பொம்மைகளின் வழியே நமது சீடு குழந்தைகள் ஒரு புதிய கலைப்பயணத்தை இவ்வாண்டு தொடங்கினர். அரையாண்டுத் தேர்வு விடுமுறையில் 6 நாட்கள் குழந்தைகளே பொம்மைகளை களிமண்ணில் வார்த்தெடுத்து, காகிதங்களில் அச்செடுத்து, காயவைத்து, வர்ணம் தீட்டி, உடையலங்காரம் செய்து தேர்ந்த நாடக கலைஞர்களாக மாறினர். அற்புதமான கூட்டு உழைப்பில் குரல் வளப் பயிற்சி, பாடல் பயிற்சி, கைகள், குரல்கள் மூலம் தங்களது திறமைகளை மெருகேற்றி மனம் மகிழ்ந்தனர். இப்பிரதியாக்கம் இளைஞர்களாலும், குழந்தைகளாலும் எழுதப்பட்டது. மதுரை சீடு குழந்தைகள், இளைஞர்களின் படைப்புத் தன்மை மெருகேறி வருவதற்கான சாட்சி இத்தொகுப்பு.

கல்வி செயல்பாடுகளில் நாடகத்தை பாடமாக கொள்வது என்பது இன்று பரவலாக பேசப்படும் செய்தியாகும். குழந்தைகள் பாதுகாக்கப்பட்ட சூழலில் இருந்து கொண்டு தங்களுக்கான உலகத்தில் கற்பனை அற்புதங்களோடு வாழ்கிறார்கள் என்பது தவறு. பெரியவர்கள் வாழும் அதே உலகத்தில் தான் குழந்தைகளும் வாழ்கிறார்கள். குடும்பமும், சமூக அமைப்புகளும் குழந்தைகள் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. மின்னணு ஊடகங்களும், பிற தொடர்பு சாதனங்களும் தாங்கள் விரும்பும் விதத்தில் குழந்தைகளது உள்ளத்தை தகவமைக்கின்றன. இந்த எதார்த்த நிலையை உணர்ந்து கொண்டு நாம் குழந்தைகளுக்கு பல்வேறு வகைகளில் கல்வியை புகட்டும் வாய்ப்புதான் இந்த பொம்மலாட்ட பயிற்சி. இக்கதைகள் யாவும் இப்பயிற்சியில் பங்கு கொண்ட குழந்தைகளைக் கொண்டே நாடக கதைகளை உருவாக்கி பின்னர் எழுத்துருவாக்கப்பட்டவை. புதுயுகம் பொம்மலாட்ட சிறப்பிதழை படித்து மகிழ்வீர்.

மதுரையில் குறிப்பாக கலைகளை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வான்முகில் கலைமன்றத்துக்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் அனுபவங்களை தெரிவிப்பீர். புதிய முயற்சிகளுக்கு உடனிருந்து உதவிய முத்துக்குமாருக்கும், இராஜேந்திரனுக்கும், சீடு தொண்டர்களுக்கும், இளைஞர்களுக்கும் நன்றிகள்.

வாழ்த்துக்களுடன்,
**அ.ச.கார்த்திக்பாரதி,**
குழந்தைகள் இளைஞர்களுக்கான நற்பணிகளில் ,
மதுரை சீடு.

# மந்திர குச்சி

காட்சி : 1

பங்கு பெறுவோர் : கோமாளி, சிறுவன்

(சிறுவன் பாடல் பாடுகிறான்)

**கோமாளி** : ஏன் இப்படி பாட்டுப் பாடி கொல்ற?

**சிறுவன்** : நான் பாடுவது பிடிக்கலைனா, நீ பாடு.

**கோமாளி** : எனக்கு பாடத் தெரியாது, கதை வேணா சொல்றேன்

**சிறுவன்** : சரி சொல்லு!

காட்சி : 2

பங்குபெறுவோர் : இராஜா, இராணி, குழந்தைதள்

**இராஜா** : இராணி, நம் குழந்தைகள் எங்கே?

**இராணி** : அவர்கள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்

**இராஜா** : சரி, வா, அவர்களைப் போய் சந்திப்போம்.

(தோட்டத்தில்)

**இராஜா** : குழந்தைகளே, நீங்கள் இன்னும் குளிக்கவில்லையா?

**குழந்தை 1** : இல்லை அப்பா, இனிமேல் தான் குளிக்க வேண்டும்.

**இராஜா** : சரி, குளிக்கும் போது நகையை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

**குழந்தை 2** : சரி அப்பா.

காட்சி : 3

பங்கு பெறுவோர் : இராஜா, இராணி, மந்திரி

**இராணி** : இராஜா, நமது குழந்தைகளின் நகைகளை காணவில்லை.

**இராஜா** : என்னது, நகைகளை காணவில்லையா? உனக்கு யார் மேல் சந்தேகம் உள்ளது?

**இராணி** : எனக்கு அந்த 4 காவலாளிகள் மீதுதான் சந்தேகமாக உள்ளது.

**இராஜா** : மந்திரியாரே!

**மந்திரி** : என்ன? அரசே

**இராஜா** : என் குழந்தைகளின் நகைகளை காணவில்லை. அந்த நான்கு காவலாளிகள் மீதுதான் சந்தேகம். நீங்கள் தான் திருடன் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும்.

**மந்திரி** : உத்தரவு அரசே

காட்சி : 4

பங்கு பெறுவோர் : அமைச்சர், நான்கு காவலாளிகள்

**அமைச்சர்** : உங்களில் யாரோ ஒருவர்தான் நகைகளை திருடியிருக்க வேண்டும்.

**நால்வரும்** : நான் திருடவில்லை அமைச்சரே.

**அமைச்சர்** : யார் திருடியது என்று நான் கண்டுபிடிக்கிறேன். இந்தாருங்கள் இந்த

நான்கு குச்சிகளும் மந்திரக் குச்சிகள். இந்த குச்சியை திருடர்கள் யாரேனும் வைத்திருந்தால் இந்த குச்சி சிறிது உயரம் வளரும். இதை வைத்து நான் திருடனை கண்டுபிடித்து விடுவேன்.

(நான்கு காவலர்களுக்கும் ஒவ்வொரு குச்சியை தருகிறார்)

காட்சி : 5

பங்கு பெறுவோர் : இராஜா, மந்திரி, காவலர்கள், திருடன்

(மந்திரி, திருடனை இழுத்துக் கொண்டு வருகிறார்)

**மந்திரி** : இராஜா, இவன் தான் திருடன்

**திருடன்** : இராஜா, என்னை மன்னித்து விடுங்கள். ஏதோ ஆசைப்பட்டு திருடிவிட்டேன்.

**இராஜா** : காவலர்களே....

**காவலர்கள்** : வந்துவிட்டோம் மன்னா.

**இராஜா** : இவனை சிறையில் அடையுங்கள்

**காவலர்கள்** : உத்தரவு மன்னா.

(காவலர்கள் திருடனை இழுத்துச் செல்கின்றனர்)

**இராஜா** : எப்படி கண்டுபிடித்தீர்கள், மந்திரி.

**மந்திரி** : இராஜா, நான் கொடுத்த குச்சிகள் உண்மையான மந்திரக் குச்சிகள் என்று நம்பினான். எனவே இந்த குச்சி வளர்ந்து விடும் என்று இவன் சிறிது வெட்டி விட்டான். மற்றவர்களிடம் கொடுத்த குச்சிகளையும் இவனிடம் கொடுத்த குச்சியையும் ஒப்பிட்டு பார்த்தபொழுது அவனது குச்சியின் உயரம் சிறிது குறைவாக இருந்தது. எனவே இவன்தான் திருடன் என்று கண்டுபிடித்தேன்.

**இராஜா** : சபாஷ், மந்திரி.

காட்சி : 6

பங்கு பெறுவோர் : கோமாளி, சிறுவன்

**கோமாளி** : என்ன, கதை நல்லா இருந்துச்சா?

**சிறுவன்** : ம்ம்ம்

**கோமாளி** : சரி வா, கிளம்பலாம்.

**தகதிமிதா**

P.பாண்டியராஜன் (XII)
K.திலகவதி (IX)
K.கௌதம் (VIII)
M.வரலெட்சுமி (VII)
K.கௌசல்யா (VII)
M.சூர்யா (VII)
M.ஆனந்த் (VI)
S.அப்துல்ரகுமான் (VI)
R.மாரியம்மாள் (VI)
M.முத்துகாமாட்சி (VI)
A.லெட்சுமி (V)
A.ஜோயல் (IV)

**கதை பிரதியாக்கம்**
**ப.பாண்டியராஜன்**
**மற்றும்**
**குழந்தைகள்**
**தகதிமிதா குழு**

பாட்டி : என்னத்த சொல்ல. மரத்த வெட்டி காசு மேல காசு மேல காசு சேத்தாங்க. அடுத்த வருஷம் மழைத் தண்ணி இல்ல. விளைச்சல் இல்ல. எல்லா பயிலுகளும் கிராமத்த காலி பண்ணிட்டு டவுனுல போய் செட்டில் ஆயிட்டாங்க.

சிறுவன் 2 : ஆமாண்டா. ஊர்ல ஒரு மரத்த கூட காணாம். அதான் மழை இல்ல.

சிறுவன் 1 : இந்த கிராமத்துக்கு ஒரு நல்ல விடிவு காலம் ஏற்படுத்தனும்டா. ஏதாச்சும் செய்யனும்டா.

சிறுவன் 2 : ஊர்ல யாராச்சும் படிச்ச பெரியவங்க இருந்தா அவரைப் போய் பார்க்கலாம்.

சிறுவன் 1 : எங்க ஸ்கூல் வாத்தியாரை போய் பார்க்கலாம்.

(இருவரும் ஆசிரியரை சென்று சந்திக்கின்றனர்)

ஆசிரியர் : வாங்கப்பா! வாங்க! எப்படி இருக்கீங்க?

சிறுவன் 1 : அது இருக்கட்டுங்க ஐயா. நம்ம ஊர் ஏன் இப்படி இருக்கு?

ஆசிரியர் : நான் சொல்றதை எல்லாம் எங்க கேட்குறாங்க. இப்பதான் நீங்க வந்துட்டீங்க. நீங்க ஏதாவது இந்த கிராமத்துக்கு நல்லது செய்யுங்க.

சிறுவன் 2 : கண்டிப்பா செய்வோம் ஐயா.

(சிறுவர்கள் இருவரும் தனியே பேசிக் கொள்கின்றனர்)

சிறுவன் 1 : மக்களிடம் போய் பேசி முதலில் மரம் வளர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

சிறுவன் 2 : நாமும் நமது பங்குக்கு மரங்களை நட வேண்டும்.

(சிறுவர்கள் சென்று விடுகிறார்கள்)

இடம் : பள்ளிக்கூடம்

(இரண்டு சிறுவர்கள் சந்தித்துக் கொள்கின்றனர்)

சிறுவன் 1 : ஹாய்! எக்ஸாம் எல்லாம் எப்படி எழுதியிருக்க

சிறுவன் 2 : ரொம்ப நல்லா எழுதியிருக்கேன். நீ உங்க கிராமத்துக்கு போகலையா?

சிறுவன் 1 : கண்டிப்பா போறேன். நீயும் வாயேன்.

சிறுவன் 2 : ஓ யெஸ் கண்டிப்பா வர்றேன்

பெண் : ஏன் தான்? நம்ம ஊர்ல பஞ்சம் தலைவிரிச்சு ஆடுதோ? தண்ணி எடுக்க 10 கி.மீ. போய் வர வேண்டி இருக்கு. கிணறு, கண்மாய் எல்லாம் ஏன் தான் இப்படி வறண்டு போச்சோ. அய்யோ! தலை சுத்துற மாதிரி வருதே. நிழலுக்கு ஒதுங்க ஒரு மரத்த கூட காணாமே. அய்யோ! ஆ ஆ ஆ

(கிராமவாசி ஒருவர் மரத்தை வெட்டுகிறார்)

சிறுவர்கள் : அய்யா! மரத்தை வெட்டாதீங்க.

கிராமவாசி : ஏம்ப்பா! விளைச்சல் இல்ல. கையில பணம் இல்ல. இந்த மரத்த வெட்டி வித்தாதான் காசு கிடைக்கும்.

சிறுவன் 1 : கிராமத்துல விளைச்சல் இல்லாததுக்கு காரணமே நீங்க மரத்த வெட்டுறது தான்.

கிராமவாசி : என்னப்பா சொல்றீங்க.

சிறுவன் 2 : ஆமாங்க, இந்த மரம் தான் நமக்கு மழையை தருது. நம்ம பயிர்களுக்கு உரமாகுது. மரத்தால பல நன்மைகள் இருக்குது.

கிராமவாசி : ஆமாம்பா, நாங்க மரங்கள் எல்லாத்தையும் வெட்டுன பிறகு தான் நம்ம ஊருக்கு பஞ்சம் வந்துச்சு. நாங்க எங்க தப்ப உணர்ந்துட்டோம் தம்பிகளா.

சிறுவன் 1 : நீங்க பண்ண தவறுக்கு, ஒரு 100 செடிகளையாவது வாங்கி நட்டு வைக்கனும்.

கிராமவாசி : கண்டிப்பா, நான் மட்டுமில்ல. கிராமத்துல எல்லாரையும் மரம் நடச் சொல்றேன்.

(மரங்கள் நடப்படுகின்றன)

ஆசிரியர் : தம்பிகளா! இளைஞர்கள் நினைச்சா எந்த விஷயத்தையும் சாதிக்கலாங்கிறதுக்கு நீங்கதான் எடுத்துக்காட்டு

கிழவி : படிச்சமா, சம்பாதிச்சமா, வசதியாக வாழ்ந்தோமானு இல்லாம இந்த பிறந்த மண்ணுக்கு, சமூகத்துக்கு பயனா ஒரு காரியம் செய்யனும்னு நினைச்சீங்களே உங்களால இந்த ஊருக்கே பெருமை.

பெண் : நீங்க படிச்சதுனால தான் இப்படி யோசிச்சு இந்த கிராமத்தையே மாத்துனீங்க. அதுபோல எங்க எல்லா புள்ளைகளையும் இனிமே படிக்க வைக்கப் போறோம்.

சிறுவர்கள் : உங்க ஒத்துழைப்பு இல்லைனா இந்த சாதனை நடந்திருக்காது. இனிமே மரங்களையும் ஒரு குழந்தையா நினைச்சு வளருங்க.

கோமாளி : பார்த்தீங்களா? அந்தப் பையங்களின் திறமையை நீங்களும் இனிமே...

குழுவினர் : நிறுத்து நிறுத்து! நீ என்ன சொல்லப் போறேன்னு எங்களுக்கு தெரியும். நல்லா படிங்க. உங்கள வளர்த்த சமூகத்துக்கு ஏதாச்சும் நல்லது செய்யுங்க. மரங்கள வளருங்க.

கதை, பிரதியாக்கம்..
C.அருண்குமார் B.Sc.,
குழந்தைகள்
வால் பசங்க குழு

**வால்பசங்க**
**O.மணிகண்டன் BE**
**C.அருண்குமார் B.Sc.,**
**N.கற்பகசெல்வி (IX)**
**M.மதன் (VIII)**
**S.முத்துகணேஷ் (VII)**
**V.ஜான்சிராணி (VII)**
**A.ரமேஷ் (VI)**
**S.கார்த்திக் (VI)**
**V.ஹேமமாலினி (VI)**
**K.ஸ்டீபன் ராஜ் (V)**
**R.காயத்ரி (V)**
**R.ரஞ்சிதா (IV)**



# கனவுகள்

கோமாளி மேடைக்குள் வருகிறான்
சினிமாப் பாட்டுஒன்றை பாடுகிறான்

கோமாளி : இந்த உலகத்தில வாழுகிற எல்லாருக்கும் ஒரு ஆசை இருக்கும். நம்ம நாடகத்துலேயும் நிறைய குழந்தைகள் வர்றாங்க. அந்த குழந்தைகளுக்கு என்ன! என்ன! ஆசைகள் இருக்குனு பார்ப்போம்.

கோமாளி சென்று விடுகின்றான்.

காட்சி : 1

பங்கேற்போர் : தமிழ், சிவா, சரவணா

தமிழ் : என்னடா! காலையில உங்க அப்பா வீட்ட விட்டு ஓடிட்டாராமே?

சிவா : என்னடா சொல்ற உண்மையாவா?

சரவணா : எங்க அப்பா காலையில ஜாக்கிங் போனத தான் அப்படி சொல்றான். டே! ஒரு முக்கியமான விஷயம். எங்கப்படா இன்னிக்கு சாயந்திரம் ஊருக்கு போறாரு. நைட்டு எங்க வீட்டு மொட்டைமாடியில தூங்கலாம். காத்து ஜில்லு ஜில்லு ஜில்லுனு இருக்கும்.

சிவா : சரிடா! வர்றோம்.

(நண்பர்கள் பிரிந்து சென்று விடுகிறார்கள்)

காட்சி : 2

இடம் : சரவணாவின் வீடு

சிவா : இப்படி மல்லாக்க படுத்து வானத்த பாக்குறது எவ்வளவு சுகமா இருக்கு!

சரவணா : வானம் எவ்வளவு அழகா இருக்கு. அப்படியே வானத்துல பறந்து போகனும் போல இருக்கு.

தமிழ் : அப்படியே, நிலாவுக்கு போய் மண் எடுத்திட்டு வரனும்.

சிவா : இவன் பெரிய ஆம்ஸ்ட்ராங். தூங்க விடுங்கடா.

(நண்பர்கள் தூங்கி விடுகிறார்கள்)

திடீரென்று தமிழ் எழுந்து நிற்கிறான். கையை அசைத்து பறப்பது போல் நடிக்கிறான். ஆகா நிலா எவ்வளவு அழகா இருக்கு. சூரியன் சுட்டெரிக்குதே என்று கத்துகிறான். வானத்தில் பறப்பது போல் நடிக்கிறான். சிவா மேல் திடீரென விழுகிறான்.)

சிவா : அய்யோ அம்மா, காலை ஓடிச்சிட்டானே...

சரவணா : என்னடா ஆச்சு தமிழ் ?

தமிழ் : டேய், நான் வானத்துக்கு போனேன்டா...
நிலா, சூரியன் கிட்டே போனேன். நிலாவுல மண் எடுத்தேன். இந்தியக் கொடியை ஊன்றினேன்.

சிவா : டேய், சூப்பர் கனவுடா!

தமிழ் : கனவு இல்லைடா, நிஜமாகவே போனேன்.

சரவணா : டேய்! பேசாம படுத்து தூங்குங்கடா (சரவணாவும், சிவாவும் தூங்கி விடுகிறார்கள்)

(தமிழ் எழுந்து பேசுகிறான்)

தமிழ் : நான் இன்னிக்கு கனவு கண்டிருந்தாலும் என்னிக்காவது நிலாவுக்கு போவேன். நாளையிலேயிருந்து இந்த கனவை நினைவாக்க உழைக்கப் போறேன்.

**விட்டில்ஸ் திரை**

1. R.பாஸ்கர் ராஜா B.Sc.,
2. R.ரவிக்குமார் (XII)
3. R.பூஜா (IX)
4. M.மதுமஸ்வரி (VIII)
5. M.தமிழ்செல்வி (VII)
6. D.சுரேஷ்கண்ணன் (VII)
7. D.விக்னேஷ்வரன் (VI)
8. R.ராஜேஸ்வரி (VI)
9. A.ராமகிருஷ்ணன் (V)
10. V.டேவிட்ராஜா (V)
11. R.வினோதினி (IV)

கதை
பிரதியாக்கம்
R.பாஸ்கர்ராஜா B.Sc.,
மற்றும் குழந்தைகள் விட்டில்ஸ் திரை குழு

# நற்பணிக்கு பரிசு

இடம் : அரண்மனை

பங்கேற்பவர்கள் : அரசன், அமைச்சர்

இடம் : அரண்மனை

பங்கேற்பவர் : அரசன், அமைச்சர்

காவலர்கள் : (வர்றார், வர்றார், ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ மார்தாண்ட, ராஜ குலோத்துங்க 24-ம் புலிகேசி மன்னர் வர்றார், வர்றார்)

(மன்னர் வருதல்), அவையில் உள்ள அனைவரும் எழுந்து நிற்றல்)

மன்னர் : அனைவரும் அமருங்கள். அமைச்சரே இங்கு வாருங்கள். நான் நாட்டிற்கு ஒரு நல்ல குடிமகனை, தேர்ந்தெடுக்க விரும்புகிறேன். அதற்கு ஏதேனும் வழி சொல்லுங்கள்.

அமைச்சர் : சரி மன்னா! நான் ஒரு நல்ல ஏற்பாடு செய்கிறேன்.

மன்னர் : சரி அவையை நாளை ஒத்தி வைக்கிறேன்.

(மறுநாள் காலையில்)

காவலர்கள் : (மீண்டும் மன்னர் வருகை பற்றி கூறல்)

மன்னர் : அமைச்சரே! என்ன திட்டம் ஏற்பாடு செய்துள்ளீர்கள்.

அமைச்சர் : மன்னா! ஒரு நல்ல வழி வைத்திருக்கிறேன்.

வாகனங்கள் செல்லும் சாலையில் ஒரு கல்லையும் வைத்து, அதற்கடியில் ஒரு புதையலும் வைக்கப் போகிறேன். எவன் ஒருவன், அந்த கல், சாலையில் இடைஞ்சலாக உள்ளது என்று நினைத்து, அதை நகர்த்தி வைக்கிறானோ, அவனுக்கு புதையல் கிட்டும். அவனே, தாங்கள் தேடிய சிறந்த குடிமகன்.

மன்னர் : நல்ல திட்டம் அமைச்சரே!

காட்சி - 2

இடம் : பள்ளிக்கூடம்

பங்கேற்பவர் : சுமதி, சீனா

சுமதி : அழுதல் (தேம்பி, தேம்பி)

சீனா : ஏன் அழுகிற சுமதி?

சுமதி : மீண்டும் அழுதல்

சீனா : நான் கேட்குறேன்ல, சொல்லு ஏன் அழுகிற.

சுமதி : (அழுதுகொண்டே) ஸ்கூல் பீஸ் கட்டுறதுக்கு காசு இல்லப்பா. எங்க வீட்ல ரொம்ப கஷ்டம். அதான் (மீண்டும் அழுதல்)

சீனா : அப்ப, நீ சிறுசேமிப்பு கட்டலையா

சுமதி : சிறுசேமிப்பா? அப்படின்னா

சீனா : சுத்தம். சிறுசேமிப்புனா, நம்ம வீட்ல நமக்கு வாங்கி சாப்பிட காசு கொடுக்கிறாங்கல்ல, அதை நம்ம பள்ளிகூடத்துல, சிறுசேமிப்புன்ற பேர்ல சேர்த்து வைப்போம். அப்ப நம்ம சேக்குற அந்த சின்னதொகை, ஒரு வருஷம், இரண்டு வருஷம் கழிச்சு, நமக்கு ஒரு பெரிய தொகையா கையில கிடைக்கும். அதுதான் சிறுசேமிப்பு.

சுமதி : இதுதான் சிறுமேிப்பா? எனக்கு இவ்வளவு நாளா தெரியாது சீனா.

சீனா : ஆமா! இப்பகூட எங்க வீட்ல ரொம்ப பணக்கஷ்டம். ஆனாலும், நான் சிறுசேமிப்பு சேர்த்து வைச்சுக்கிறதால, அந்த பணத்தை வைச்சு பீஸ்

கட்டிட்டேன். என்னோட சிறுசேமிப்புல இன்னும் பணம் இருக்கு. அத நான் உனக்கு பீஸ் கட்ட தர்றேன். நீ எனக்கு பணம் கிடைக்குறப்ப திரும்ப கொடுத்தா போதும்.

சுமதி : ரொம்ப நன்றி சீனா. சிறுசேமிப்பு கட்டுறதுனால, நமக்கு எவ்வள்வு நல்லதுன்றத நல்லா தெரிஞ்சுகிட்டேன். இந்த வருஷத்துல இருந்து, நானும் சிறுசேமிப்புல சேர்ந்து, எங்க அம்மா, அப்பா, கொடுக்கிற காசை சேர்த்து வைக்கப்போறேன்.

சீனா : சரிடி, கண்ணை துடைச்சுக்கோ. சிரி, வா போகலாம்.

காட்சி - 3

இடம் : சாலை

பங்குபெறுவோர் : மகேஷ், ஆனந்த்

மகேஷ் : வாடா ஆனந்த், பள்ளிக்கூடம் முடிஞ்சுருச்சு வீட்டுக்குப் போகலாம்.

ஆனந்த் : சரி வாடா ரமேஷ்.

(வரும் வழியில் ஒரு கூட்டம்)

இருவரும் கூட்டத்தை சென்று பார்த்தல்

ஒருவன் : இப்போது, நமது சங்கத்தலைவர், மறத்தமிழன் நம் தலைவர் ஐயா நம்மிடையே சில வார்த்தை பேசுவார்.

தலைவர் : அனைவருக்கும் வணக்கம், நான் இப்போது பாரதியாரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் உங்களுடன் பேச விரும்புகிறேன். பாரதி யார்?
ம்.... அவர் நாட்டிற்காக என்ன செய்திருக்கிறார். சாலைகள் ஓரம் மரங்களை நட்டுள்ளார். நிழற்குடைகளை அமைத்துள்ளார்.

பி.ஏ. : சார், அது அக்பர், பாரதியார் இல்லை

தலைவர் : (சரி விடுயா! எப்படி சமாளிக்கிறேன் பாரு) நீங்கள் எல்லாரும் நினைக்கலாம். என்னடா இவன் அக்பர் செஞ்சதெல்லாம் பாரதியார் செஞ்சேன்னு சொல்றானேனு நீங்க நினைக்கலாம். பாரதியாரும், அக்பரும், பிஸினஸ் பார்ட்டனர்கள் தானே

(உடனே இருவரும் கோபமாக கிளம்புதல்)

மகேஷ் : டே, ஆனந்த் அந்த தலைவருக்கு அக்பருக்கும், பாதியாருக்குமே வித்தியாசம் தெரியல.

ஆனந்த் : என்னடா பண்றது!, அவங்க என்ன சொன்னாலும் கேட்குறதுக்கு ஒரு கூட்டம் இருக்கு. அதனால அவங்க பேசுறாங்க. விடுடா.

(அந்த நேரத்தில் ஒரு பார்வையற்றவர் வருதல்)

ஆனந்த் : டே மகேஷ்! அங்க ஒரு அம்மா ரோடு கிராஸ் பண்ண முடியாம தவிக்கிறாங்க. வாடா அவங்களுக்கு உதவி பண்ணலாம்.

கண் தெரியாதவர்: ஐயா, சாமி, யாராவது இந்த ரோட கிராஸ் பண்ண உதவி பண்ணுங்க.

(இருவரும் கையை பிடித்து உதவி செய்தல்)

கண் தெரியாதவர்: ரொம்ப நன்றிப்பா. நீங்க நல்லா இருக்கணும்.

(கொஞ்சம் தூரம் சென்றவுடன்)

மகேஷ் : ஆனந்த், அங்க பாருடா ரோடெல்லாம் ஒரே குப்பையா இருக்கு. இவங்களுக்கு அறிவே இல்லைடா, நடுரோட்டுல குப்பையை கொட்டிருக்காங்க. அதுக்கு அந்த குப்பைதொட்டியில போடலாம்ல. சோம்பேறி பயலுக.

ஆனந்த் : சரி வாடா, நாமலே அந்த குப்பைகளை எடுத்து குப்பை தொட்டியில் போடலாம்.

(இருவரும் குப்பைகளை எடுத்து குப்பைத் தொட்டியில் போடுதல்)

(மீண்டும் கொஞ்ச தூரம் செல்லுதல்)

ரிக்ஷாக்காரன் : எவண்டா அவன் இங்க இவ்வளவு பெரிய கல்லை வைச்சவன்
(ஒதுங்கி செல்லுதல்)

சைக்கிளில் இருவர் : இங்க பாரு ரோட்ல இவ்வளவு பெரிய கல் இருக்கு! எவனாச்சும் எடுத்து போடுறானா (ஒதுங்கி செல்லுதல்)

மகேஷ் : அங்க பாருடா எவனோ ஒரு பெரிய கல்லை நடுரோட்டுல போட்டுருக்காங்க. வாடா அதை எடுத்து ஓரமா போடுவோம்.

ஆனந்த் : சரி வா போவோம்.

(இருவரும் மிகவும் சிரமப்பட்டு கல்லை தூக்குதல்)

ஆனந்த் : டே மகேஷ் இங்க பாருடா கல்லுக்கு கீழே ஏதோ பெட்டி இருக்கு. வாடா என்னான்னு திறந்து பார்க்கலாம்.

(திறத்தல்)

ஆனந்த் : டே மகேஷ். தங்கம். வைரம். வெள்ளினு இங்க பாருடா மின்னுது. இத நம்மலே வைச்சுக்கலாண்டா.

மகேஷ் : டே. அது தப்புடா. இதை எடுத்துட்டு போய் மன்னர்கிட்ட கொடுத்துடலாம். அவரு நமக்கு ஏதாவது நல்ல பரிசு தருவார்.

(இருவரும் அரண்மனையை நோக்கி நடத்தல்)

அவைக்காவலர்: என்ன வேணும். உங்களுக்கு எங்க உள்ளே போகிறீர்கள்.

ஆனந்த் : ஐயா. எங்களுக்கு இந்த புதையல் வரும் வழியில் கிடைத்தது. அதை மன்னரிடம் கொடுத்துவிட்டுச் செல்லலாம் என்று வந்தோம்.

அவைக்காவலன் :சரி உள்ளே போ

மகேஷ் : மன்னா! இன்று நாங்க வரும் வழியில் ஒரு பெரிய கல் நடுரோட்டில் கிடந்தது. அதை ஓரமாய் நகர்த்தியபோது இந்த புதையல் அதற்கு அடியில் இருந்தது. இந்தாருங்கள் மன்னா.

மன்னர் : சிறுவர்களே. அந்த புதையலை கல்லுக்கு அடியில் வைத்தது வேறு யாரும் இல்லை நான்தான். நாட்டிற்கு ஒரு நல்ல குடிமகன் வேண்டும் என்பதற்காக. என் அமைச்சர் போட்ட திட்டம் தான் இது.

இப்பொழுது எங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. நான் தேடிய அந்த சிறந்த குடிமகன்கள் நீங்கள்தான். இந்த பரிசும் உங்களை சென்றே சேர வேண்டும்.

இருவரும் : நன்றி மன்னா! நாங்கள் வருகிறோம்.

கதை பிரதியாக்கம்
**G.விஜய் B.E.,**
குழந்தைகள்
நண்டு சிண்டு குழு

**நண்டு சிண்டு**

1. **G.விஜய் BE**
2. **D.மகேஷ்குமார் (IX)**
3. **M.மாணிக்கராஜா (IX)**
4. **A.சுமதி (VIII)**
5. **K.ஆனந்த்குமார் (VII)**
6. **P.சத்யா (VII)**
7. **R.சீனியம்மாள் (VI)**
8. **R.கீதா (V)**
9. **S.தினேஷ்குமார் (V)**
10. **S.சுப்புலெட்சுமி (IV)**
11. **S.அருண்குமார் (VII)**



# முயற்சியே வெற்றி

காட்சி : 1

இடம் : பள்ளிக்கு செல்லும் வழியில்

பாங்கு பெறுபவர்கள் : ராமு, மணி

(நடந்து செல்கிறார்கள்)

மணி : என்னடா! ராமு, இன்னிக்கு பரீட்சைக்கு படிச்சிட்டயா?

ராமு : இன்னிக்கு என்ன பரீட்சையடா.

மணி : அதுவே தெரியாதா, இன்னிக்கு இங்லீஸ் பரிட்சை.

ராமு : நான் ஒன்னுமே படிக்கலைடா, நீயும் படிச்சிருக்க மாட்டேனு எனக்கு தெரியும்.

மணி : என்ன கொடுமை ராமு இது.

ராமு : நாம ரெண்டு பேருமே ஒன்னும் படிக்கலை. இன்னிக்கு ஸ்கூல கட் அடிச்சிட்டு ஏதாச்சும் படத்துக்கு போயிரலாம்டா.

(இரண்டு பேரும் சென்று விடுகின்றனர்)

காட்சி : 2

இடம் : பள்ளிக்கூடம்

பாங்கு பெறுபவர்கள் : ஆசிரியர், முத்து, மாணவர்கள்

(மணி அடிக்கிறது)

ஆசிரியர் : என்னாங்கடா எக்ஸாம்-க்கு எல்லாரும் படிச்சிட்டீங்களா? (மாணவர்களை எண்ணுகிறார்) என்ன இரண்டு பேர காணாம்.

முத்து : ராமுவும், மணியும் வரலை டீச்சர்

ஆசிரியர் : எக்ஸாம்னா அவிங்களுக்கு உடம்பு சரியில்லாம போயிடும். சரி நீங்க எழுதுங்க.

(மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்)

(மணி அடிக்கிறது)

ஆசிரியர் : பெல் அடிச்சாச்சு, பேப்பர கொடுத்துட்டு கிளம்புங்க

(மாணவர்கள் கிளம்புகிறார்கள்)

காட்சி - 3

இடம் : பொது இடம்

பாங்கு பெறுபவர்கள் : முத்து, மணி, ராமு

மணி : முத்து! நீ பாஸாயிட்டயா.

முத்து : யார பாத்து என்ன கேள்வி கேட்கிற. நான்தான் கிளாஸ்லேயே பர்ஸ்ட் ரேங்க். நீ பெயில்தான் ஆயிருப்பேனு எனக்கு தெரியும்.

மணி : டேய் ரொம்ப பேசாதே. நான் பாஸ். நம்ம ராமு தான் ரொம்ப குறைவான மார்க்.

ராமு : டேய் சும்மா கெடடா. நீ வேற. நானே வீட்ல எப்படி இந்த விஷயத்த சொல்றது-னு யோசிச்சிட்டு இருக்கேன்.

முத்து : இனிமே என்னடா செய்யப் போற.

ராமு : நமக்கு படிப்பெல்லாம் சரிப்பட்டு வராது. ஏதாச்சும் வேலைக்கு போலாம்-னு நினைக்கிறேன்.

(ராமு, முத்து, மணி சென்று விடுகிறார்கள்)

(சில வருடங்களுக்கு பிறகு என குழுவினர் கத்துகின்றனர்)

காட்சி - 4
இடம் : வீடு
பங்கு பெறுபவர்கள் : ராமு, அவனது மனைவி
(ராமு விறகு வெட்டிக் கொண்டிருக்கிறான்)

ராமு : ஏய்! தண்ணீ கொண்டுட்டு வாடி.

(மனைவி தண்ணீர் கொண்டு வருகிறாள், ராமு தண்ணீர் அருந்திவிட்டு வேலையை தொடர்கிறான்)

மனைவி : ஏங்க, நம்ம ரொம்ப வருஷமா இந்த இடத்துல இருக்கோம். ஆனா இன்னும் பட்டா கெடைக்கலையே.

ராமு : அடியே! நம்ம ஊருக்கு புது கலெக்டர் வந்திருக்கார்னு கேள்விப்பட்டேன். நாளைக்கே போய் ஒரு மனு கொடுத்துட்டு வந்திடுவோம்.

காட்சி - 5
ஆட்சியர் அலுவலகம்
பங்குபெறுபவர் : கலெக்டர், ராமு, அவனது மனைவி
(கலெக்டர் பின்புறம் திரும்பி நிற்கிறார்)

ராமு : ஐயா, நாங்க பனையூர் கிராமத்திலிருந்து வர்றோம். எங்க தாத்தா காலத்தியிலிருந்து அங்க வீடு கட்டி குடியிருக்கோம். ஆனா பட்டா, கிட்டா எதுவும் கொடுக்கல.எப்படியாவது நீங்க பட்டா கொடுக்க ஏற்பாடு செய்யணும்.

(கலெக்டர் முகத்தை திருப்பி, ராமுவை பார்க்கிறார்)

கலெக்டர் : பனையூர் கிராமமா? உங்க பேரு.

ராமு : என் பேர் ராமுங்க.

கலெக்டர் : ராமுவா, நான் தான்டா முத்து.

ராமு : முத்துவா, எப்படிடா இருக்க

கலெக்டர் : எனக்கு என்னடா, நீ எப்படி இருக்க.

ராமு : என்னத்த, ஏதோ வாழ்க்கை ஓடுது. எனக்கு கல்யாணம் ஆயிடுச்சுடா இவதான் என் மனைவி.

மனைவி : வணக்கம்

கலெக்டர் : அடுத்த வாரம் எனக்கு கல்யாணம். நீங்க ரெண்டு பேரும் கண்டிப்பா வரணும்.

(பத்திரிக்கை கொடுக்கிறார்)
(ராமுவும், மனைவியும் பத்திரிக்கையை வாங்கிக் கொண்டு கிளம்புகின்றனர்)

காட்சி - 6
இடம் : கல்யாண வீடு
பங்குபெறுவோர் : முத்து, ராமு, ராமுவின் மனைவி, கல்யாண வீட்டார்

ராமு : முத்து, கல்யாண உடுப்புல ரொம்ப ஜோரா இருக்கடா

முத்து : சரி, அப்புறம் பேசலாம். போய் முதல்ல சாப்பிட்டுட்டு வாங்க

(ராமுவும், மனைவியும் சென்று விடுகிறார்கள்)

முத்து : வரமாட்டாங்கனு நினைச்சேன். வந்து கேவலப்படுத்துறான்.

(ராமு, ராமுவின் மனைவி இருவரும் சேரில் உட்கார்ந்து இருக்கிறார்கள்) (அப்போது கல்யாண வீட்டுக்காரர் ஒருவர் வருகிறார்)

கல்யாண வீட்டுக்காரர் யேய்! ரெண்டு பேரும் எந்திரிங்க. போய் அந்த கடைசி வரிசையில உட்காருங்க. இது வி.ஐ.பி.-ங்க உட்காருற இடம்.

ராமு : யோவ்! எங்கள யாருன்னு நினைச்ச நாங்க மாப்பிள்ளையோட பிரண்ட்.

(கல்யாண வீட்டுக்காரருக்கும், ராமுவுக்கும் சண்டை வந்துவிடுகிறது)
(முத்து அங்கே வருகிறான்)

முத்து : என்ன, இங்க சண்ட.

ராமு : என்ன முத்து, இவன் எங்கள ரொம்ப கேவலமாக பேசுறான்.

முத்து : நீங்க யாரு, உங்கள எனக்கு தெரியவே தெரியாதே. சாப்பாடு வேணும்னா போயிட்டு கடைசியிலே வாங்க.

ராமு : டேய், என்ன பாத்தா யாருன்னு கேட்கிற. நான் கேட்கிறேன். நீ யாரு. இந்த மாதிரி மண்டைகனம் புடிச்சவன் எனக்கு நண்பனாகவே இருக்க முடியாது. நான் போறேன்.

காட்சி - 7
இடம் : ராமுவின் வீடு
பங்குபெறுவோர் : ராமு, அவனது மனைவி

ராமு : நான் படிக்காதத நினைச்சு இன்னிக்கு தான் ரொம்ப வருத்தப்படுறேன். இனிமே என்ன செய்ய.

மனைவி : அப்படி சொல்லாதீங்க. நீங்க பத்தாவது வரைக்கும் படிச்சிருக்கீங்க. போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்குறாங்கனு செய்தித்தாள்-ல படிச்சேன்.

ராமு : அப்படியா, நான் எப்படியாவது கஷ்டப்பட்டு போலீஸ் ஆகுறேன்.
(ராமு நிறைய புத்தகங்கள் படிக்கிறான். உடற்பயிற்சி செய்கிறான்) போலீஸ் வேலைக்கு தேர்வாகிறான்)

காட்சி 8 : ஆட்சியர் அலுவலகம்
பங்கு பெறுவோர் : கலெக்டர், இன்ஸ்பெக்டர், ராமு

இன்ஸ்பெக்டர் : ராமு, போய் உள்ள இருக்குற கலெக்டர கைது பண்ணிட்டு வாங்க. அவர் வெள்ள நிவாரண நிதியில ஊழல் செய்ததால அவர அரெஸ்ட் பண்ணச் சொல்லி ஆர்டர் வந்திருக்கு.

ராமு : யெஸ், சார்.

(உள்ளே சென்று கலெக்டரை பார்த்த ராமு அதிர்ச்சியடைகிறான்)

கலெக்டர் : ராமு, நீயா

ராமு : நான்தான். உனக்கு ரொம்ப நன்றி. அன்னிக்கு நீ என்னை கேவலப்படுத்தின பிறகுதான், நான் திருந்தி, உழைச்சு இந்த நிலைமைக்கு வந்திருக்கேன்.

கலெக்டர் : டேய், நான் உன் நண்பன்டா. (ராமு சிரிக்கிறான்)

ராமு : சாரி முத்து, என்னால என் கடமையிலேயிருந்து தவற முடியாது.
(கலெக்டரை ராமு அரெஸ்ட் செய்கிறான்)

**முகங்கள்**
1. M.செந்தில்குமார் (XII)
2. P.அஷ்டலெட்சுமி (XI)
3. P.ராம்கி (IX)
4. P.யோகராஜ் (VIII)
5. A.சர்மிளா (VII)
6. S.பாபுஜி (VII)
7. R.சுவலெட்சுமி (VI)
8. P.உமா மகேஸ்வரி (V)
9. V.ஸ்ரீநாத் (V)
10. A.ஜேம்ஸ் (VI)

கதை பிரதியாக்கம்
**M.செந்தில்குமார்**
குழந்தைகள்
முகங்கள் குழு

## PUPPET SHOW TRAINING CAMP

(26.12.08-31.12.08)



MADURAI SEED conducted a puppet show training camp for the children and young people from 26.12.08 to 31.12.08. It is a special activity for the half yearly holidays that empowers the children's theatre skills, creativity. More than 80 children and 20 young people make useful of this camp.

At the first day, A.S.Karthik Bharathi, student Pandiya Rajan and the camp director Rajendran inaugurated the camp. First children were divided into 5 teams; each one has unique names as **LITTLE'S THIRAI, MUGANGAL, NANDU SINDU, THAGA THIMI THA, and VAAL PASANGA**. Volunteer MurugaPandi thought SEED songs for all the days to children to cheer them. The camp director Rajendran gave a brief talk about himself and the puppet show. The teams and he discussed a lot in making a show and its preparation. Then children were directed to select a script and choice of making puppets easily. After selecting the scripts, each team has 5 scripts and took demonstration in front of all. They gave tips, correction and many changes to the scripts and finally they prepared the children to show their creativity in making of puppets with very curious they got ready.



At the second day Mr.Rajendren explained how to make attractive faces suitable to the script with clay. With great involvement children took a first step in clay molding as an art of creating characters. In evening children enhanced their scripts by doing a drama.

In the third day, at the very beginning the camp was started with seed songs. Mr.Rajendren brought some puppets, which were already made, and children practiced their scripts behind the screen. The puppet making process was going day by day with much improvement. The whole day, all the teams concentrated in practice session and the camp end with seed songs amazingly.

In the fourth day, children removed the clay from the mask of the puppet to paint on with the direction of Rajendran. In noontime children stared painting on the faces of the puppets and cut cloths to make dresses by the direction of Mr.Rajendren. One group was in practice session, karthik anna polish the children's play with the introduction songs and how to perform on the stage. It was smarten up the children performance.

This was the final day, children involved them their selves in making the puppets beauty and it was the final process in the camp, they gave life to the puppets by dressing and voiced for the action of it. In the evening, volunteer Arun Elizhan came as guest. He enjoyed all 5 plays and congratulated them. He got sweets from a friend and shared with children, wished for New Year. The camp was so funny and craze.




On the first morning of 2009, the children demonstrated their puppet show well in karumpalai middle school for the parents and public. Mr.Rajendren and his children participated as special guests. Children exposed their dramas with efficiently using of their puppets. Our volunteers performed an instant show that amused all. MADURAI SEED gave certificates to all the participants. Thus the New Year begins with more learning and joy.

**Documentation - C.Arunkumar**

# அனுபவப் பகிர்வு

எனக்கு பொம்மலாட்ட Camp ரொம்ப பிடிச்சிருந்தது. எங்க குழு பெயர் "மரம் வளர்ப்போம்". Volunteers எங்களுக்கு உதவி செய்தார்கள். களிமண்ணால எப்படி பொம்மை செய்யறதுனு சொல்லித் தந்தாங்க. பொம்மைகளை அசைய வைக்கிறது பத்தி சொல்லித்தந்து தந்தாங்க. இராஜேந்திரன் அண்ணன் பொம்மைக்குள் கையை வைத்து அசைப்பது எனக்கு ரொம்ப பிடிக்கும்.

பொம்மைகள் செஞ்சதும் நான் சில பொம்மைகளுக்கு கலர் அடிச்சேன். பொம்மைகள் ரொம்ப அழகாக இருந்தது. இந்த அரையாண்டு லீவு எனக்கு ரொம்ப பயனுள்ளதா இருந்தது. கடைசியில பொம்மைகள் வைச்சு கரும்பலகை ஸ்கூல்ல நாடகம் போட்டோம் எல்லோரும் ரொம்ப பாராட்டுனாங்க.

— A. ரமேஷ்

VI

அரையாண்டு லீவுல நான் எப்பவும் ஊருக்கு போயிருவேன். ஆனால் இந்த வருஷம் பொம்மலாட்ட முகாமில கலந்துகிட்டேன். எனக்கு ரொம்ப பயனுள்ளதா இருந்தது. எங்க டீம் பேரு "முகமூடிகள்".

எங்க நாடகம் பேரு "முயற்சி திருவினையாக்கும்". நாங்கள் களிமண்ணையும், பேப்பரை-யும் பயன்படுத்தி பொம்மைகள் செய்தோம். விரல்களை மாட்டி பொம்மைகளின் மாட்டி நாடகம் நடித்தோம். இது புதுமையாக இருந்தது. புத்தாண்டு அன்று நாடகங்களை நடித்தோம். எங்களுக்கு சர்டிபிகேட் வழங்கினார்கள். பொம்மலாட்ட முகாமில் கலந்து கிட்டது சந்தோஷமா இருந்தது, பயனுள்ளதாக இருந்தது.

சி. ஷர்மிளா

VII

## அக்டோபர் - 2008

| நாள் | நிகழ்வுகள் |
|---|---|
| 1.10.08 | ரம்ஜான் கொண்டாட்டம். இராமேஸ்வரத்தில் **FCMRP** மண்டலக் கூடுகை. காமராஜர் திரைப்படம் திரையிடல் இளம்பிறை மணிமாறன் உரைகேட்டல். காந்தி கருத்தரங்கு அ.ச.கார்த்திக் பாரதி |
| 2.10.08 | காந்தி ஜெயந்தி அமைதி பேரணி. காந்தி திரைப்படம் திரையிடல். முனைவர்.சுந்தர ஆவுடையப்பன் உரை கேட்டல். |
| 3.10.08 | முனவர்.சாலமன் பாப்பையா உரை கேட்டல். காந்தி மியூசியம். |
| 4.10.08 | வாண்டுகள் அரங்கம் சூழலியல் பூங்கா பார்வையிடல். |
| 5.10.08 | காலை : கூட்டாஞ்சோறு நிகழ்வு மாலை : முனைவர் ஞானசம்பந்தம் உரைகேட்டல். |
| 6.10.08 | சீடு குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பேரவை கூட்டம். |
| 7.10.08 | தொண்டர் கூட்டம். |
| 8.10.08 | மன்சூர் அலி அவர்களின் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி |
| 9.10.08 | நாட்டுப்புற கலைகள் சடங்கியல் தன்மை - கலந்துரையாடல் |
| 10.10.08 | அறிவியல் கூட்டம் **Biodiversity** கார்த்திக்ராஜா |
| 11.10.08 | எளிய ஊட்டச்சத்து வகை பயிலரங்கு - கார்த்திக் பாரதி |
| 12.10.08<br>13.10.08<br>14.10.08<br>15.10.08<br>16.10.08 | புதுயுகம் தயாரிப்பு பணிகள் |
| 17.10.08<br>18.10.08<br>19.10.08 | எவிடன்ஸ் நிறுவனத்திற்காக தலித் குழந்தைகள் கணக்கெடுப்பு |
| 21.10.08 | தொண்டர் கூட்டம் |
| 23.10.08<br>24.10.08 | தீபாவளி கலைநிகழ்ச்சி ஒத்திகை |
| 25.10.08 | தீபாவளி கொண்டாட்டம் |
| 27.10.08 | சிறுகதை வாசிப்பும் விவாதமும். அபிராமி துர்காதாஸின் "இராஜா" |
| 29.10.08 | சீடு மூத்த தொண்டர்கள். கௌதமன். சுரேஷ்<br>உரைபொருள் : உயர்கல்விக்கான அறிவியல் படிப்புகள் |

## நவம்பர் - 2008

| தேதி | நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|
| 3.11.2008 | கனவுகள் அரங்கத்தில் கூரை அமைப்பதற்கு தொடர்பாக முதற்கட்ட வேலைகள் தொடக்கம். பங்கேற்பு. சீடு இளைஞர்கள் 3.11.08 முதல் 12.11.08 வரை |
| 14.11.2008 | குழந்தைகள் தினவிழாக் கொண்டாட்டம்<br>சிறு கதை வாசிப்பு நடராஜனின் 'ஆயிஷா' |
| 16.11.2008 | தொழில்நுட்ப கண்காட்சியை பார்வையிடல். மடீட்சியா |
| 17.11.2008 | சிறுகதை வாசிப்பு கி.ரா.வின. "கதவு" |
| 18.11.2008 | ஜெய்ஹிந்த்புரம் FCMRP மாவட்ட கூடுகையில் பங்கேற்பு.<br>சிறுகதை வாசிப்பு அழகிரி சாமியின் "ராஜா வந்திருக்கிறார்" |
| 19.11.2008 | சிறுகதை வாசிப்பு. சுந்தர ராமசாமியின் "ஸ்டாம்ப் ஆல்பம்" |
| 20.11.2008 | தப்பாட்ட பயிற்சி. பொம்மலாட்ட நாடகப் பயிற்சி.<br>சிறுகதை வாசிப்பு வண்ணதாசனின் "ஓர் உல்லாசப்பயணம்" |
| 21.11.2008 | சிறுகதை வாசிப்பு. மாலனின் "தப்புக் கணக்கு" |
| 23.11.2008 | திருமலை நாயக்கர் மஹால் - பார்வையிடல் |
| 24.11.2008 | சிறுகதை வாசிப்பு இமயத்தின் "நெல்சோறு" |
| 25.11.2008 | சிறுகதை வாசிப்பு ச.தமிழ்செல்வனின் "பதிமூணில் ஒண்ணு" |
| 26.11.2008 | சிறுகதை வாசிப்பு திருவையாறு எஸ்.பாலகுமாரின் "பூக்கள் போலும் அருவிகள் போலும்" |
| 28.11.2008 | சிறுகதை வாசிப்பு திருவாழத்தானின் "மாறுவேடம்", சிலம்ப கோலாட்ட பயிற்சி |
| 29.11.2008 | தலித் குழந்தை தொழிலாளர் கருத்தரங்களில் பங்கேற்பு -<br>சுப்ரீம் ஹோட்டல் சமூக சேவகர் சுரேஷ் தர்மா நினைவேந்தல் கூட்டத்தில் பங்கேற்பு - செசி |
| 30.11.2008 | சிறப்பு பட்டிமன்றம் : "சத்துணவு ஏழைகளால் சாப்பிட முடியுமா"<br>மேற்கத்திய நடன பயிற்சி - பாஸ்கர் ராஜா |

## டிசம்பர் - 2008

| நாள் | நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|
| 1.12.08 | தேவராட்ட பயிற்சி - முருகபாண்டி |
| 2.12.08 | கோலாட்ட பயிற்சி - தங்கலெட்சுமி |
| 3.12.08 | கலைநிகழ்ச்சிகள் ஒத்திகை |
| 4.12.08 | மதுரை 3வது புத்தக கண்காட்சி :<br>வான்முகில் கலைக்குழுவினர் கலைநிகழ்ச்சி வழங்கினர். |
| 5.12.08 | புத்தக கண்காட்சி பார்வையிடல் (வாண்டுகள்) |
| 6.12.08 | புத்தக கண்காட்சி பார்வையிடல் (வேர்கள்) |
| 7.12.08 | புத்தக கண்காட்சி பார்வையிடல் (கனவுகள்) |
| 8.12.08 | நிலாச்சோறு |
| 9.12.08 | தியாகத் திருநாள் கட்டுரை வாசிப்பு - அ.ச.கார்த்திக்பாரதி |
| 10.12.08 | மனித உரிமை பயிற்சி - சுல்தான் அலாவுதீன் |
| 11.12.08 | ஒளித் திருநாள் - கலந்துரையாடல் |
| 12, 18.12.08 | அரையாண்டுத் தேர்வுகள் |
| 19.12.08 | அ.ச.கார்த்திக்பாரதி கருத்துரை வழங்கல், அமெரிக்கன் கல்லூரி |
| 21.12.08 | கிறிஸ்துமஸ் குடில் அமைப்பு |
| 22.12.08 | அரையாண்டு தேர்வு விடுமுறை தொடக்கம் |
| 23.12.08 | மாலை நேர ஆங்கில பயிற்சி வகுப்பு |
| 25.12.08 | கிறிஸ்துமஸ் கொண்டாட்டம், கிறிஸ்துமஸ் தாத்தா கதை - ஆல்பர்ட் பொம்மலாட்ட பயிற்சி முகாம் முதல் நாள். |
| 26.12.08 | பொம்மலாட்ட பயிற்சி முகாம் 2-ஆம் நாள் |
| 27.12.08 | பொம்மலாட்ட பயிற்சி முகாம் 3-ஆம் நாள், ஆங்கில பயிற்சி வகுப்பு |
| 28.12.08 | பொம்மலாட்ட முகாம் 4-ஆம் நாள் |
| 29.12.08 | பொம்மலாட்ட முகாம் 5-ஆம் நாள், மார்கழி உற்சவம் மதுரை சீடு குழந்தைகள், இளைஞர்கள் பேரவை 10ஆம் ஆண்டு கூடுகை |
| 30.12.08 | பொம்மலாட்ட முகாம் 6-ஆம் நாள் |
| 31.12.08 | பொம்மலாட்ட முகாம் 7-ஆம் நாள், PREED நிறுவண ஆண்டு விழாவில் பங்கேற்பு -கப்பலூர் |

| ஜனவரி 2009 | |
|---|---|
| நாள் | நடைபெற்ற நிகழ்வுகள் |
| 01.01.09 | பொம்மலாட்ட முகாம் நிறைவு விழா<br>சீடு பத்தாம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டம் சிறப்புரை - கதிர் எவிடன்ஸ் |
| 02.01.09 | திரு. கதிர் அவர்களின் உணவு விருந்து |
| 04.01.09 | 'பூ' திரைப்படம் திரையிடல் |
| 05.01.09 | தொண்டர்கள் கூட்டம் (திட்டமிடல்) |
| 06.01.09 | கலை நிகழ்ச்சிகள் ஒத்திகை |
| 07.01.09 | திருமதி. தாரணி அம்மா வருகை |
| 08.01.09 | மீனாட்சியம்மாள் கோவில் பார்வையிடல், கனவுகள் அரங்கம் திறப்பு விழா ,<br>சிறப்பு விருந்தினர்கள் லௌரா, USA நண்பர்கள் |
| 09.01.09 | திருமதி. தாரணி அம்மா - வாண்டுகள் அரங்கம் பார்வையிடல் |
| 10.01.09 | திருமதி. தாரணி அம்மா - வேர்கள் அரங்கம் பார்வையிடல் |
| 11.01.09 | வாழ்த்து அட்டைகள் தயாரிப்பு பயிற்சி - மாஸ்டர் குணசேகரன், விக்னேஷ்<br>திருமதி. தாரணி அம்மா - கனவுகள் அரங்கம் பார்வையிடல் |
| 12.01.09 | இளைஞர் தினவிழா - சிறப்புரை<br>**Prof.** பிரபாகரன், **Prof.** பாபுசார்லஸ் |
| 13.01.09 | கோலம், பூத்தொடுப்பு மற்றும் அலங்காரப் பயிற்சிகள் சரண்யா, அமுதா<br>சீடு குழந்தைகளின் நிலாக் கூடுகை - சூழலியல் பூங்கா,<br>தேர்வை எதிர்கொள்ள பயிற்சி - கார்த்திக்பாரதி |
| 14.01.09 | பொங்கல் கொண்டாட்டம், சமணர்மலை, நாகமலைப் புதுக்கோட்டை |
| 15.01.09 | ஆங்கில பேச்சுப் பயிற்சி, கிராமத்து விளையாட்டுகள், ஸ்விஸ் பற்றி அறிதல் |
| 16.01.09 **to** 17.01.09 | **English Language Games** |
| 18.01.09 | ஜெய்ஹிந்த்புரம் **FCMRP** (கூடுகையில் பங்கேற்பு, 12ம் வகுப்பு மாணவியர் வீடுகளை பார்வையிடல் (தாரணி) |
| 19.01.09<br>20.01.09<br>21.01.09 | தாரணியின் சிறப்பு ஆங்கில பயிற்சி வகுப்புகள் |
| 22.01.09 | கல்லூரி முதலாமாண்டு மாணவர்கள், தாரணி நாயக்கர் மஹால் பார்வையிடல் - இலவச நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா |
| 23.01.09 | மீனாட்சி சுந்தரேஸ்வரர் பள்ளியை பார்வையிட தாரணி சென்றனர், ஆங்கில பயிற்சி வகுப்பு |
| 24.01.09 | பத்தாம் வகுப்பு சிறப்பு கணித பாட பயிற்சி வகுப்பு வழங்கியவர் - பெரியசாமி |
| 25.01.09 | ஆங்கில ஆசிரியருக்கான பயிற்சி முகாம், ஹோட்டல் நார்த்கேட் |
| 26.01.09 | குடியரசு தினவிழா கொண்டாட்டம், செங்குந்தர் பள்ளி பத்தாம் வகுப்பு தேர்வு சிறப்பு பெற்றோர்களை பாராட்டி சுவரொட்டி வைத்தல், கிராம சபை கூட்டத்தில் பங்கேற்பு வலையங்குளம், ஆங்கில ஆசிரியருக்கான பயிற்சி முகாம் - இரண்டாம் நாள் |
| 27.01.09 | **Prof.** மாதவன் வரை |
| 28.01.09 | பத்தாம் வகுப்பு அறிவியல் பாட சிறப்பு வகுப்புகள் (பெரியசாமி) |
| 29.01.09<br>30.01.09 | ஆங்கில பயிற்சி வகுப்புகள் |
| 31.01.09 | பாண்டியராஜன் தூத்துகுடியில் **FCMRP** மாவட்ட கூடுகையில் பங்கேற்றல்<br>திருமதி. வேலுமணி அவர்களின் சமையல் வகுப்பு<br>மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பார்வையிடல் |

| பிப்ரவரி 2009 | |
|---|---|
| நாள் | நடைபெற்ற நிகழ்வுகள் |
| 1.2.09 | மதுரை சீடு நிறுவன நாள் கொண்டாட்டம்.<br>தூத்துக்குடி FCMPR மண்டல கூடுகையில் பங்கேற்பு<br>குழந்தைகளுக்கான அறிவியல் வினாடிவினா நிகழ்ச்சி |
| 2.2.09 | ஆங்கில பயிற்சி வகுப்புகள் |
| 4.2.09 | திரையிடல் 'Schindler's Lift' |
| 5.2.09 | தாரணி அவர்கள் செங்குந்தர் பள்ளி பார்வையிடல்<br>சீடு குழந்தைகள் பேரவைக் கூட்டம்<br>சீடு இளைஞர் பேரவைக் கூட்டம் |
| 6.2.09 | பிரௌச்சர் தயாரிப்பு பயிற்சி |
| 7.2.09 | சீடு நண்பர் பாரி கணேசன் இல்ல புதுமனை புகு விழாவில் பங்கேற்பு<br>Fulinnakeller, rulf, Jitgulefy (Swiss) நண்பர்கள் வருகை |
| 8.2.09 | Web Page Designing Training |
| 9.2.09 | ஜான் வருகை. தேர்வு காலமும். சாப்பாட்டு முறைகளும் பயிலரங்கு |
| 10.2.09 | குறும்பட தயாரிப்பு பயிற்சி<br>ஈவா. கார்மென் (சுவிஸ்).<br>பிரான்சிஸ்(இத்தாலி) - வெளிநாட்டு நண்பர்கள் வருகை |
| 11.2.09 | குறும்பட தயாரிப்பு பயிற்சி |
| 12.2.09 | படைப்பரங்கம் |
| 13.2.09 | மூவரசன் வருகை. சீடு மையங்களை பார்வையிடல் |
| 17.2.09 | வான்முகில் கலைவிழா ஒத்திகை |
| 18.2.09 | தொண்டர்கள் கூட்டம் |
| 20.2.09 | பன்னிரெண்டாம் வகுப்புசீடு மாதிரித் தேர்வுகள் தொடக்கம் |
| 21.2.09 | ப்ரௌச்சர் தயாரிக்கும் பணி |
| 22.2.09 | கூடல்நகர் நியூமா சிறுவர் இல்லத்தில் வான்முகில் கலைவிழா கொண்டாட்டம் |
| 23.2.09 | பத்தாம் வகுப்பு சீடு மாதிரித் தேர்வுகள் தொடங்கின |
| 25.2.09 | திரையிடல் - 'Slum dog millionaire' |
| 26.2.09 | கலந்துரையாடல் - 'Slum dog millionaire' |
| 27.2.09 | தொண்டர்கள் கூட்டம் |
| 28.2.09 | லௌரா விடை தரு விழா (குழந்தைகள் - சமுதாயக் கூடம்) |

## மார்ச் - 2009

| நாள் | நிகழ்வுகள் |
|---|---|
| 01.03.09 | லௌரா விடை தரு விழா (இளைஞர்கள்) |
| 02.03.09 | +2 பொதுத்தேர்வுகள் தொடங்கின (2.3.2009 முதமல் 23.03.2009 வரை) |
| 03.03.09 | +2 ஆண்டுத்தேர்வு பயிற்சிகள் |
| 04.03.09 | +2 ஆண்டுத்தேர்வு பயிற்சிகள் |
| 07.03.09 | **Laura's online English class** |
| 08.03.09 | மகளிர் தினவிழா கொண்டாட்டம், கார்த்திக் அண்ணன், மன்சூர் அண்ணன், செசி கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்பு, **John Birthday Celebration** |
| 10.03.09 | நூற்றுக்கு நூறு அறிவியல் பாடத்தில் பெறுவது எப்படி? - ஆசிரியர் மருதமுத்து |
| 11.30.09 | இருநூற்றுக்கு இருநூறு கணக்குப்பதியில் பாடத்தில் பெறுவது எப்படி? - ஆசிரியர் மூவரசன் |
| 12.03.09 | +2 ஆண்டுத்தேர்வு பயிற்சிகள் |
| 13.03.09 | **Laura's online English class** |
| 15.03.09 | சீடு திறனறித் தேர்வுகள் (15.3.09 முதல் 19.3.09) |
| 17.03.09 | ஆனந்த விகடன் துணை ஆசிரியர் திருமாவேலன் கருத்தரங்கில் பங்கேற்பு **CESCI** |
| 19.03.09 | **Laura online English class** |
| 22.03.09 | தலைமைத்துவ பயிற்சி வகுப்பு - மூவரசன், சீடு பணியாளர்கள் அரசுப் போட்டித் தேர்வு எழுதினர். |
| 24.03.09 | **MSCF** சந்தா வரவு-செலவு பணிகள் |
| 25.03.09 | 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வு தொடக்கம் |
| 26.03.09 | **MSYF** சந்தா வரவு-செலவு பணிகள் |
| 27.03.09 | **Laura online English class** |
| 28.03.09 | எவிடன்ஸ் மாநில கருத்தரங்கில் பங்கேற்பு |
| 29.03.09 | புதுயுகம் இதழ் தயாரிப்பு பணிகள் |
| 30.03.09 | புதுயுகம் இதழ் தயாரிப்பு பணிகள் |
| 31.03.09 | புதுயுகம் இதழ் தயாரிப்பு பணிகள் |















இதழ் வெளியீட்டுக் குழு
C.அருண்குமார் B.Sc., (தொண்டர் பொறுப்பாளர்)
C.கற்பகஜோதி. V.திவ்யபாரதி. S.முத்துகணேஷ். M.மாணிக்கராஜ்

குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்
சென்னை ஆஷா
திருமிகு.வே.மாரியம்மாள். திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி. திருமிகு. க.அன்பரசன்
மதுரை சீடு நிர்வாகக் குழு

தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்
சீடு அறக்கட்டளை
அர்ஜீன் சண்முகா இல்லம். 439/1. கிழக்குத் தெரு. கரும்பாலை.மதுரை-20.
பேசி : 9894805446. 94425 37670. 0452-22537670
மின்னஞ்சல் : **mdu.seed1999@yahoo.co.in**
வலைதளம் : **www.ashanet.org # seednarpanigal**
**www.madurai-seed.org**

*மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.*